பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை



மாத இதழ்

அக்டோபர் 2013

# என் முகத்தைத் தேடுங்கள்

சங். 27:8

மலர் 14

இதழ் : 6



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையால் 2013 –ம் வருடத்தின் 10 –ம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் கிருபையாய் தந்ததற்காய் அவரை ஸ்தோத்தரிப்போம். கடந்த மாதம் சபையின் ஆராதனைகள், ஜெபக் கூடுகைள் மற்றும் சபையின் மூலம் நடைபெற்ற எல்லா ஊழியங்களிலும் தேவனுடைய வழி நடத்துதலையும் பிரசன்னத்தையும் உணர முடிந்தது. இந்த மாதத்தில் சபையின் மூலம் நடக்கும் ஆராதனைகள், ஊழியங்கள் மற்றும் விசேஷித்த கூட்டங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேவன் நமக்கு மதிலாக நின்று நம்மைக் காக்கும் தேவனாக இருக்கிறார். சாத்தானோ அல்லது நம்மை வெறுப்பவர்களோ நம்மை பல விதத்தில் துன்புறுத்துவதற்கு விரும்பலாம். ஆனால் தேவனுடைய அனுமதியில்லாமல் அவர்கள் நம்மை நெருங்கவே முடியாது. யோபுவை எந்த தீங்கும் தொட முடியாதபடி தேவன் அவனைச் சுற்றி வேலியிட்டு காத்ததை சாத்தான் உணர்ந்திருந்தான் (யோபு. 1:10). இருப்பினும் யோபுவை பரிசுத்தப் படுத்தும்படிக்கு தேவன் அந்த வேலியை கொஞ்சம் திறக்கும்படி செய்து அவனை தாக்குவதற்கு சாத்தானை அனுமதித்தார். வேலியை எவ்வளவு திறக்க வேண்டும் என்பதை தேவனே தீர்மானம் செய்தார். யோபு ஒன்றாம் அதிகாரத்தில் திறக்கப்பட்டது. பின்பு யோபு இரண்டாம் அதிகாரத்தில் சற்றே அதிக மாய் திறக்கப்பட்டது. இவ்வாறு தேவன் திறந்த அந்த வேலியின் வழியாக சபேயர் களும் கல்தேயர்களும் நுழைந்து யோபுவின் சொத்துக்களை கொள்ளையாடினார்கள் (யோபு. 1:15,17). யோபுவின் பிள்ளைகள் மேல் வீடு தகர்ந்து விழும்படியாக வீசிய பெருங்காற்றும், இவ்வாறு தேவன் திறந்த வேலியின் வழியாகத்தான் பிரவேசித்தது. இருப்பினும் யோபுவின் சரீரத்தை நோய் தாக்கும் அளவிற்கு இன்னும் அதிகமாய் திறந்த பின்புதான் நோயும் உள்ளே பிரவேசித்து யோபுவை வாதிக்க முடிந்தது.

தனக்கு நிகழ்பவைகளையெல்லாம் தேவன் கண்ட்ரோல் (Control) செய்து கொண்டிருக்கிறார் என்பதை யோபு முதலில் அறிந்து கொள்ளவில்லை. எல்லாம் நிறைவேறி முடிந்த பின்புதான் அதை அறிந்துணர்ந்தான் (யோபு. 42:2). நமக்கு இப்போது இருப்பது போல யோபுவிடம் வேதாகமம் கிடையாது. ஆனால் நமக்கோ தேவன் நம்மை சுற்றிலும் வேலி வைத்து பாதுகாக்கிறார். எல்லாவற்றையும் அவர்தான் கண்ட்ரோல் (Control) பண்ணுகிறார் என்கிற வேத வசனங்கள் உண்டு. நம்மை சுற்றிலும் அக்கினி மதிலாக தேவனே அந்த வேலியாக இருக்கிறார் என்று (சக. 2:5) –ல் எழுதியிருக்கிறதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் எலிசாவின் வேலைக்காரனைப் போல் இப்பரலோக உண்மையைக் காண முடியாதபடி அல்லது நம்ப முடியாதபடி நம் ஆவிக்குரிய கண்கள் பிரகாசம் இல்லாமல் இருக்கிறது. நம்மைச் சுற்றிலும் தேவன்

வைத்துள்ள அக்கினி மதிலைக் காண்பதில்லை. எலிசாவினால் காண முடிந்ததினால் அவன் பயமில்லாமல் இருந்தான் (2இராஜா. 6:15–17). நம்முடைய கண்களும் இவ்விதம் திறக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

இந்த வேலியை பார்க்க என் கண்களை திறந்தருளும் என்று ஜெபிப்போம். தேவன் நம் மனக் கண்களை பிரகாசிக்கும்படி செய்வாராக. தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**



## பதில் சொல்லுங்க

**( தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும் )**

1. தாவீது சவுலின் கைக்கு தப்பி பெலிஸ்தரின் தேசத்திலே எத்தனை நாட்கள் குடியிருந்தான்?
2. தாவீதை வெட்ட வேண்டும் என்றிருந்த இராட்சத புத்திரனின் பெயர் என்ன?
3. சவுல் கில்காலிலே பலி செலுத்துவதற்கு எத்தனை நாட்கள் காத்திருக்கும்படி சாமுவேல் சொன்னார்?
4. கர்த்தர் என்னை எருசலேமுக்கு திரும்பி வரப்பண்ணினால் கர்த்தருக்கு ஆராதனை செய்வேன் என்று பொருத்தனை பண்ணியது யார்?
5. சவுல் தாவீதிடம் கேட்ட வாக்குறிதி என்ன?
6. கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக என்று யார் யாரிடம் சொன்னது?
7. தாவீது எந்த ஜனங்களை செங்கற்சூளையையும் கடக்கப்பண்ணினான்?
8. இன்றைய தினம் உம்முடைய கண்கள் கண்டதே என்று யார் யாரிடம் சொன்னது?
9. உங்கள் இருதயத்தை கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள் என்று யார் யாரிடம் சொன்னது?
10. தாவீதுடைய சத்துருக்களின் கையிலே கர்த்தர் கணக்கு கேட்பாராக என்று யார் யாரிடம் சொன்னது?
11. தாவீது எருசலேமிலே எத்தனை வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்?
12. உன் சிநேகிதன் மேல் உனக்கு இருக்கிற தயை இதுதானோ என்று யார் யாரிடம் சொன்னது?
13. கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தவர்கள் யார்?
14. இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார் என்று யார் யாரிடம் சொன்னது?
15. இன்றைய வரைக்கும் நான் உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை என்று யார் யாரிடம் சொன்னது?

குறிப்பு:_ வேதாகமத்தில் 1சாமுவேல் மற்றும் 2சாமுவேல் ஆகிய புத்தகங்களில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 18-10-2013 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

கர்த்தர் வழக்காட எழுந்திருந்து; ஜனங்களை நியாயந்தீர்க்க நிற்கிறார். _ஏசா. 3:13



# தேடுங்கள்



**"என் முகத்தைத் தேடுங்கள்"** (சங். 27:8). கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ,உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக! பழைய ஏற்பாடு காலத்தில் வாழ்ந்தாலும், புதிய ஏற்பாடு காலத்திற்கு முன்னோடியாக வாழ்ந்தவரில் தாவீது முக்கியமானவராவார். எடுத்துக்காட்டாக பழைய ஏற்பாடு காலத்தில் கர்த்தருடைய முகத்தை யாரும் காண இயலாது. அவருடைய முகத்தை காண்பவர்கள் மரித்துவிடுவர் என்ற நம்பிக்கை மேலோங்கியிருந்தது. கர்த்தருடைய முகத்தை பார்க்க பயந்தவர்களில் சிலரை நாம் காணலாம். மோசே (யாத். 3:6), மனோவா (நியா. 13:22) மற்றும் எலியா (1இராஜா. 19:13). ஆனால் தாவீது இவைகளைக் கடந்து கர்த்தருடைய முகத்தைத் தேட அழைப்பு பெற்று அவரின் முகத்தை தேட விருப்பமாயிருந்தது நம்முடைய ஆவிக்குரிய வாழ்விற்கு ஒரு முன் மாதிரியாயிருக்கிறார். இவரில் காணப்பட்ட குணாதிசயத்தை சங்கீதம் 27 –ல் கண்டு, தான் நடைமுறைப்படுத்த விருப்பமாயிருந்தவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

**1. ஒரு விசுவாசம்:–** தாவீது வாழ்வின் எல்லா காலங்களிலும் கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். உயர்ந்த நிலையிலும், தாழ்ந்த நிலையிலும், கடினமான வேளைகளிலும், எதிர்ப்புகளின் நடுவிலும் மனிதர்களின் முகத்தை காண விரும்பாமல் கர்த்தரை மட்டுமே சார்ந்திருந்தார். இவருடைய விசுவாசத்தை பல சங்கீதங்களில் மிக நேர்த்தியாக பிரதிபலித்திருக்கிறார். சிறுவயதில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த காலத்திலும், சவுலுக்காக பயந்து ஓடிய காலத்திலும், அரசராக இருந்த காலத்திலும் இவரது விசுவாசத்தை காணமுடிகிறது. நம்முடைய வாழ்வை நினைத்துப் பார்க்கும் பொழுது, எத்தனை வேளைகளில் சுயத்தை சார்ந்திருக்கிறோம்? மற்ற நண்பர்களை, தலைவர்களை, அதிகாரிகளை சார்ந்திருக்கிறோம்? நம்முடைய நம்பிக்கை யார் மீது இருக்க வேண்டுமென நீதிமொழிகள் 3:5 –ல் பார்க்கிறோம். **"உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து",** சங்கீதகாரர் மனிதரையும் பிரபுக்களையும் சாந்திருப்பதைவிட கர்த்தரை நம்புவது நல்லது என் சங். 118:8, 9 –ல் கூறுகிறார்.

**2. ஒரு இலட்சியம்:–** இரண்டாவதாக, இந்த சங்கீதத்தின் வாயிலாக நாம் கற்றுக்கொள்வது அவர் எல்லா வேளைகளிலும் கர்த்தருடைய பிரசன்னத்தில் இருப்பதையே தன்னுடையவிருப்பமாக, இலட்சியமாகக் கொண்டிருந்தார். தாவீது அரசர் காலத்தில் கூடார அமைப்பிலான ஆலயமாயிருந்தது. அரசர் அரண்மனையிலிருப்பதைக் காட்டிலும் இவர் கூடாரத்திலிருந்த தேவனுடைய ஆலயத்தையே, அதில் வெளிப்பட்ட கர்த்தருடைய சமூகத்தையே விரும்பினார். வேதாகமத்தில் இதை வெளிப்படுத்திய ஒரு நபரை கர்த்தர் நல்ல பங்கை தெரிந்துகொண்டவர் என்று கூறினார்.

**"அவளுக்கு (மார்த்தாள்) மரியாள் என்னப்பட்ட சகோதரி இருந்தாள், அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்"** (லூக். 10:39,42). பிரியமானவர்களே! அநேக வேளைகளில் நம்முடைய இலக்கு பலவாக மாறிவிடுகிறது. பொருள் ஈட்டுவதிலும், உயர் பதவிகளை பெருவதிலும் நாம் கவனம் செலுத்தி கர்த்தருடைய பிரசன்னத்தை இழந்து விடுகிறோம். அநேக வளர்ந்த திருச்சபைகள் தற்போது கர்த்தருக்கு தொடர்பு இல்லாதது போல செயல்படுகிறதை நாம் காண்கிறோம்.

**3. ஒரு வேண்டுதல்:–** மூன்றாவதாக, இந்த சங்கீத்தில் நாம் காணும் மற்றொரு குணாதிசயம் கர்த்தரிடத்தில் வேண்டுதலாகும். இந்த வேண்டுதல் காற்றில் அனுப்பப்படும் மன்றாட்டாக அல்ல. என்னை படைத்த கர்த்தரோடு பேசும் உரையாடலாக வெளிப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால் பதில் உண்டு என்ற நம்பிக்கையோடு கூடிய மன்றாட்டாகும். **"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசைவரும்"** (சங். 121:1–2). தன்னுடைய வேண்டுதலைக் கூறும் வேளையில் தான் சங்கீதக்கரர் கர்த்தருடைய முகத்தை நாடுகிறார். மற்றவர்கள் பார்க்க விரும்பாத அல்லது பார்க்க பயந்த கர்த்தருடைய முகத்தை இவர் பார்க்க விரும்பினார். மட்டுமல்ல கர்த்தர் தேடும்படி அழைத்ததாக குறிப்பிடுகிறார். ஏன் மற்றவர்கள் கர்த்தரின் முகத்தைப் பார்க்க பயந்த காலத்தில் தாவீது தைரியமாக பார்க்கவிரும்பினார் என்ற கேள்வி என் மனதில் எழுந்தது.

இதில் மறைந்திருக்கும் உண்மை என்னவெனில் மற்றவர்கள் கர்த்தரிடத்தில் செல்லும் போது தங்களை பார்த்தார்கள். பாவி என்ற பாவ நிலை அவர்களை தடுத்தது. பரிசுத்தமுள்ள கர்த்தர் தங்களை காண முடியாதெனவும், அப்படியே அவருடைய முகத்தைக் கண்டால் மரணம் நிச்சயம் எனவும் உணர்ந்தார்கள். ஆனால் சங்கீதக்காரர், கர்த்தரிடத்தில் சென்ற போது தன்நிலை மறந்து, கர்த்தருடைய கிருபையை பார்த்தார். அது அவருக்கு விடுதலை தருவதாகவும், வழி காட்டுவதாகவும், பாதுகாப்பதாகவும் இருந்தது. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! கர்த்தர் இரக்கமுள்ளவர், கிருபையுள்ளவர். இயேசுகிறிஸ்துவின் வாயிலாக அவரை முக முகமாக பார்க்கும் சிலாக்கியத்தை பெற்றிருக்கும் நாம் விசுவாசத்தோடு அவரை நோக்கிப் பார்ப்போம். 27 –ம் சங்கீதத்தில் இன்னும் அநேக சத்தியங்கள் உண்டு. முழு இருதயத்தோடு ஆராய்ந்து அவற்றை நாம் அறிந்து கொள்ளுவோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**கர்த்தரின் ஊழியத்தில்**

**Rev. பென்கர் ஸ்டீபன்**

# அறிந்த வார்த்தை அறியாத அர்த்தங்கள்

**"கேதுரு"** மரங்கள் கடல் மட்டத்திலிருந்து 3500 அடிக்கு அதிகமாக அமைந்திருக்கும் மலை சிகரங்களில் வளர்பவை. லீபனோன், துருக்கி, சீப்புரு தீவு ஆகிய பகுதிகளில் காணப்படும் இம்மரம் வேதாகமத்தில் தனக்கென்று தனி இடம் பிடித்துக் கொண்டுள்ளது. லீபனோன் நாட்டின் தேசியக் கொடியில் இம்மரம் இடம் பெற்றுள்ளது. 100 அடி உயரமும் 6 அடி அகலமும் உடையதாய் வளர்ந்தோங்கிய இம்மரங்கள் பார்ப்பதற்கு பிரம்மாண்ட காட்சி தருபவை (ஆமோ. 2:9). ஆகவே தான் கர்த்தருடைய வார்த்தையின் வல்லமையை விளக்க சங்கீதக்காரன் **"கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது"** என்று வியந்து பாடுகிறார் (சங். 29:5). இஸ்ரவேல் நாட்டில் காணப்படும் எல்லா மரங்களையும் விட லீபனோனின் கேதுரு மரம் வேதாகமத்தில் திவ்வியமான கேதுரு, உச்சிதமான கேதுரு என்று வர்ணிக்கப்பட்டு அதிகமாக போற்றப்படுகிறது (சங். 80:10, எரே. 22:7).

கேதுரு மரம் அநேக ஆவிக்குரிய இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்துகிறது.

1. **தண்ணீர் அருகே வளர்பவை:-** கேதுரு மரங்களின் பிரம்மாண்டத்திற்கும் திரட்சிக்கும் பின் மறைந்திருக்கும் இரகசியம் என்னவெனில் அவை தண்ணீர் அருகே வளர்கின்றன (எண். 24:6). அதைப் போலவே பரிசுத்த ஆவியானவர் என்னும் நீர்க்கால்களின் ஓரமாய் நாட்டப்பட்ட மனிதன் இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருக்கிறான். அவனே கனிகள் நிறைந்த வாழ்வை உடைய பாக்கியவான் (சங். 1:1) என்று சங்கீதக்காரன் விவரிக்கிறார். தேவன் நம் ஒவ்வொருவரையும் கேதுரு மரங்களைப் போல ஆவியானவர் எனும் ஜீவத் தண்ணீர் அருகே நாட்ட விரும்புகிறார்.

2. **காட்டிலிருந்து ஆலயத்திற்கு:-** தகப்பனுடைய கடைசி ஆசையை நிறைவேற்ற விரும்பிய சாலமோன் ராஜா எருசலேமில் தேவாலயம் ஒன்றை எழுப்பினார். ஆலயத்தை கட்ட பலவிதமான விலையுயர்ந்த பொருட்களை முதலாவது திரட்டினார். அதில் ஒன்று கேதுரு மரங்கள். தேவாலயத்தில் உத்திரங்களை உருவாக்க தீரு தேசத்து ராஜாவாகிய ஈராமிடம் சாலமோன் அரசர் கேதுரு மரங்களை தருமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு ஈடாக கலிலேயா நாட்டில் உள்ள 20 பட்டணங்களை கொடுத்தார் (1இராஜா. 5:10, 6:36). தூர தேசத்தில் எங்கோ ஒரு மலைக் காட்டில் வளர்ந்த கேதுரு மரங்கள் இப்போது சர்வ வல்லவராகிய பரிசுத்த தேவனின் ஆலயத்தில் அங்கமாயின. யாராலும் கண்டு கொள்ளப்படாத அம்மரங்கள் இப்போது அனைவருடைய தொழுகை ஸ்தலத்தை தாங்கும் உத்திரங்கள் ஆயின. கேதுரு மரங்கள் பெற்றிருக்கும் பாக்கியம் தான் எத்தனை பெரியது!

இதைப் போலவே பூமியின் கடையாந்தரங்களிலே கிறிஸ்துவை சேராதவர்களும் இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்த நாம் இப்போது தேவனுடைய இரத்தத்தால் விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய சரீரமாகிய சபையிலே இணைக்கப்பட்டுமிருக்கிறோம் (எபே. 2:12, 1கொரி. 6:20). கேதுரு மரங்களைப் போலவே ஆவியானவர் எனும் நதியருகே நீங்கள் நாட்டப்படுவீர்களானால், தேவனுடைய வாசஸ்தலத்தில் நடப்பட்டு காணப்படுவது நிச்சயம். இது எத்தனை பெரிய பாக்கியம்!.

**அன்புள்ள சகோதரன்**
**சிவகுமார்**

ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன். -ஏசா. 6:1

# QUIZ FOR CHILDREN

(Write the answers by reading the BIBLE (N. K. J. Version). Children those who are studying above SECOND Standard can participate)

1. Who was Moses' assistant?
2. Who told Joshua to take off sandal from his foot?
3. How much space shall be there between the people and the ark of the covenant of the Lord?
4. How many prepared for war crossed over before the Lord for battle, to the plains of Jericho?
5. Who dwelt on the wall?
6. "Only be strong and of good courage" who said to whom?
7. What shall be for a memorial to the children of Israel forever?
8. What did all the kings of the Amorites and Canaanites hear?
9. How many men did Joshua send from Acacia Grove?
10. Name the city beside Zaretan where the waters stood and rose in a heap?

**Note:- ANSWERS can be taken from Joshua 1 to 5. Submit your answers to the Sunday School Teachers on or before 18.10.2013. Please mention the reference along with the answers.**

## ANSWER FOR THE QUIZ (SEPTEMBER)

| | |
|---|---|
| 1. Immanuel – God is with us | – Matt. 1:23 |
| 2. Jeremiah | – Matt. 2:17 |
| 3. John the Baptist | – Matt. 3:1 |
| 4. For they shall see God. | – Matt. 5:8 |
| 5. Jesus marvelled at the centurious faith. | – Matt. 8:10 |
| 6. Matthew | – Matt. 9:9 |
| 7. Eye | – Matt. 6:22 |
| 8. For all that labour and are heavy laden who come to Jesus. | – Matt. 11:28 |
| 9. The son of man. | – Matt. 12:40 |
| 10. Peter | – Matt. 14:29 |

நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப்பார்: -ஏசா. 7:6

# மாம(பு)னிதர் டேவிட் பிரெய்னார்ட்

## (1718 – 1747)

பெலவீனமான சரீரத்தைக் கொண்ட ஒருவர் மிஷனரிப் பணியில் ஈடுபடமுடியுமா? என்ற கேள்விக்கு ஆம் என்று பதிலளிக்கிறது டேவிட் பிரெய்னர்ட் என்ற மிஷனரியின் வாழ்க்கை வரலாறு. 1718 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20–ம் தேதி கனக்டிகட் என்ற இடத்திலுள்ள ஹாடம் என்ற ஊரில் டேவிட் பிரெய்னார்ட் பிறந்தார். இவரது பெற்றோருக்கு மொத்தம் ஒன்பது பிள்ளைகள் ஆனால் டேவிட் பிரெய்னார்ட்–க்கு 9 வயதிருக்கும் போது தகப்பனாரும் 14 வயதில் தாயாரும் இறந்து போயினர். எனவே சிறுவயது முதல் ஒரு சோக மனப்பான்மையை கொண்டவராயும் மரணபயத்தால் பீடிக்கப்பட்டவராயும் இருந்தார். அதனால் சிறுவயதில் சந்தோஷத்தையும், விளையாடும் ஆர்வத்தையும் இழந்தார். தீய பழக்க வழக்கங்கள் சந்தோஷத்தை தரும் என்று பிரியத்துடன் அதில் ஈடுபட்டு தனது மனசாட்சியைக் கறைபடுத்தி குற்ற உணர்வுகளால் பாதிக்கப்பட்டார். ஒரு ஞாயிற்றுக் கிழமை தனது சகோதரியுடன் இணைந்து பண்ணையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது தேவனுடைய கோபாக்கினையைப் பற்றிய எண்ணம் அவருடைய உள்ளத்தில் ஏற்பட்டது. ஒரு நாளை முழு உபவாச நாளாக ஒதுக்கீடு செய்து ஜெபம் செய்தார். தேவன் அவரது இருதயக் கண்களைத் திறந்து அவருடைய பாவங்களை உணர்த்தினார். பிரெய்னார்ட் தன் பாவங்களைத் தேவனிடம் அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றபோது சமாதானம் அவரை சூழ்ந்து கொண்டது. 1739–ம் ஆண்டு தனது 21–வது வயதில் ஏல் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். அங்கு வியாதிப்பட்டமையால் வீடு திரும்ப நேரிட்டது. 1742–ம் ஆண்டு எபிநேசர் பெம்பர்டோன் என்பவர் செவ்விந்தியர்கள் மத்தியில் மிஷனரிப் பணி செய்யப்பட வேண்டிய அவசியத்தை சவாலாகப் பிரசங்கித்த போது ஆண்டவர் தன்னை மிஷனரியாகச் செவ்விந்தியர் மத்தியில் பணிபுரிய அழைப்பதை டேவிட் உணர்ந்தார். **“தேவனே இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் கரடு முரடான காட்டு மிராண்டிகளிடமும் போக ஆயத்தமாயிருக்கின்றேன்”.** உலகத்தின் சகல வசதிகளையும் விட்டுப் போகவும் ஏன்? மரணத்தினூடேயும் செல்ல ஆயத்தம். உம்முடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்காக எங்கு வேண்டுமானாலும் போக ஆயத்தமாயிருக்கிறேன் என்று தன்னை அர்ப்பணித்து ஜெபித்தார்.

மிஷனரிப் பணிக்கென தனது அழைப்பை உறுதிபடுத்திக் கொண்ட டேவிட் ஸ்காட்லாந்து மிஷனரி ஸ்தாபனத்தில் இணைந்து செவ்இந்தியர்கள் வசிக்கும் கௌநாமீக் என்ற இடத்தில் ஊழியம் செய்தார். ஊழியப் பாதையில் இவரது வாழ்வு அதிக கடினம் நிறைந்ததாக இருந்தது. கரடு முரடான பாதைகளில் தளராமல் நடந்து சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். இவர் எங்கெல்லாம் சுவிசேஷத்தை பிரசங்கித்தாரோ அங்கெல்லாம் மக்கள் கண்ணீர் விட்டு அழுது மனந்திரும்பினர். சாங்கவேன் என்ற இடத்தில் இவர் பிரசங்கித்த போது பிரசங்கத்தைக் கேட்ட பலதரப்பட்ட மக்கள் இருதயத்தில் குத்துண்டு மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். அப்போது பட்டணங்களிலுள்ள பெரிய சபைகளுக்குப் போதகராக வந்து பொறுப்பெடுக்க அவரை அவரது நண்பர்கள் பலர் அழைத்தனர். ஆனால் டேவிட் அதற்கு மறுத்து செவ்இந்தியருக்காகவே வாழ்வேன் என உறுதிபட கூறிவிட்டார்.

சேனைகளின் கர்த்தரையே .... அவரே உங்கள் பயமும்; அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக. -ஏசா. 8:13

**"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்"** (சங்:126:5) என்ற வசனத்துக்கேற்ப டேவிட் செய்த ஊழியம் பலன் கொடுக்க ஆரம்பித்தது. 1745–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒருநாள் காலை அவர் செவ்இந்தியருக்கு பிரசங்கித்த போது கேட்டவர்கள் ஆத்தும வியாகுலத்தால் நிரம்பி அழ ஆரம்பித்தனர். சிறுவர்கள் கூட இவரது செய்தியினால் தொடப்பட்டனர். வெள்ளையர்களையும் இவரது செய்தி தொட்டது. 1745–ம் ஆண்டு கிராஸ்வீக்சங் என்ற இடத்திலும் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட்டார். 1746 –ம் ஆண்டு நியூ ஜெர்சி என்ற இடத்திலுள்ள செவ்இந்தியர்கள் மத்தியில் ஒரு திருச்சபையை நிறுவினார். இப்படி இவரது பணிமூலம் ஒன்றரை வருடத்துக்குள் 150 மக்கள் விசுவாசத்திற்குள் வந்தனர். இவரது ஊழியத்தின் பலனைப் போலவே பாடுகளும் பெருகின. இவர் ஆங்கிலேயருக்கு விரோதமாகச் செயல்பட்டு செவ்இந்தியர் மத்தியில் கலகத்தை ஏற்படுத்துகிறார் என்று கூறி அவரைத் தண்டிக்க அரசாங்க அதிகாரிகள் பிரயாசப்பட்டனர். உலகம் என்னை துன்மார்க்கன் எனக்கருதி என்னை உபத்திரவப்படுத்தினாலும், தேசத்துரோகி என்று என்னை சிரச்சேதம் பண்ணினாலும் ஆபத்துக் காலத்தில் தேவன் என் உயர்ந்த அடைக்கலம், அவரது வார்த்தைகளை நான் தைரியமாய் மக்களுக்குச் சொல்லுவேன் என்றார். 1745 –ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு கடுமையான இருமலும் காய்ச்சலும் உண்டாயின. உடலில் அதிகமான வலி ஏற்பட்டது ஆனாலும் நடந்து சென்று செவ்இந்தியருக்கு பிரசங்கிப்பதை அவர் நிறுத்தவில்லை. தனது சுகவீனத்தைக் குறித்து அவர் எழுதும் போது நான் பிழைத்திருக்க வேண்டுமோ என்பது என் ஆண்டவரின் பிரச்சனை. அதைக் குறித்து நான் கவலைப்படுவது அவசியமற்றது என்று தனது டைரியில் எழுதினார். வாசிக்கவோ முடியாத நிலையில் இருந்தாலும் என்னுடைய ஆவியோ புது உற்சாகமடைந்திருப்பதை உணருகிறேன் என்றார். அவருக்கு காச நோய் முற்றிவிட்டது என்றும் பிழைப்பது மகா கடினம் என்றும் அவரை பரிசோதித்த மருத்துவர்கள் கூறினர். ஆனால் டேவிட் அதைக் குறித்துக் கவலைப்படாமல் எப்போதும் சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டார்.

அவர் சுகவீனமடைந்ததால் அவருக்கு திருமணத்திற்கென நிச்சயம் செய்யப்பட்டிருந்த ஜெருஷா அம்மையாரும் இன்னும் சில நண்பர்களும் அவருக்கு பணிவிடை செய்தார்கள். அவருக்கு கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. மரணம் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவர் தனக்கு நியமிக்கப்பட்டட ஜெருஷாவை நோக்கி, ஜெருஷா! நீ என்னை விட்டுப் பிரிந்திருக்க ஆயத்தமாயிருக்கிறாயா? நான் உன்னை விட்டுப் பிரிந்து செல்ல ஆயத்தம். நான் இனி உன்னைக் காணாவிட்டாலும் நித்தியத்தில் நாம் சந்தோஷமாயிருப்போம் என்று கூறினார். 5 வருடங்கள் மிஷனரிப் பணி செய்து 19 வாரங்கள் படுக்கையிலிருந்த அவர் 1749 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 –ம் தேதி காலை ஆறு மணியளவில் தேவனுடைய ராஜ்ஜியம் சேர்ந்தார். 29 வயதிலேயே மரணத்தை தழுவிய டேவிட் பிரெய்னார்ட்டின் ஊழியத்தை ஆய்வு செய்த ஒருவர் இப்படியாகக் கூறுகிறார். 70 ஆண்டுகள் ஜீவித்த மனிதர்கள் சாதித்ததைக் காட்டிலும் அவர் அதிகமாகவே சாதித்திருக்கிறார் என்று.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஷாலோம் கிரேஸ்
- செல்வி. கீதா கொம்மையன்
- செல்வி. லின்டா வில்கின்சன்
- செல்வி. பிரியன்கா சதீஷ்குமார்
- செல்வன். ஜோசப் அருள்செல்வன் தர்மர்
- செல்வன். ஜேசன் ஆல்ப்ஸ் ஜேம்ஸ்
- செல்வன். கிளிஃபர்ட் ஃபிராங்க் வென்கடேசன்
- செல்வன். நினோ ஆலிஸ்டர் ஜார்ஜ்
- செல்வன். ரோஷன் அசோக்குமார்
- செல்வன். ஸ்ரீதர் அல்போன்ஸ்
- செல்வன். தினேஷ் அருள்மணி
- செல்வன். எபின் கேட்சில் ஜெயக்குமார்
- சகோதரி. லின் டஃப்னி ஜெபசிங்
- சகோதரி. ஜான்சி அற்புதராஜ்
- சகோதரி. கஸ்தூரி மனோகரன்
- சகோதரி. அருள்மேரி அகிலா ஜாய்சன்
- சகோதரி. விக்டோரியா ஃபிராங்க்
- சகோதரி. ஜெபா
- சகோதரி. மரகதம் ஸ்டீபன்
- சகோதரி. பியூலா மெர்ஸ்சி ஜெகநாதன்
- சகோ. ஸ்டாலின் சுனில் வின்ஸ்
- சகோ. டேனியல் மாணிக்கம்
- சகோ. மார்க் ஆன்றனி
- சகோ. ஜாண்வெஸ்லி
- சகோ. ராஜாசிங்
- சகோ. வில்கின்ஸ் தினகரன்
- சகோ. தம்புகுமார் டென்னிஸ்
- சகோ. ஜெயக்குமார் ஞானதாஸ்
- சகோ. ஆஸ்டின் முத்தையா



## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. குமாரசாமி
- திருமதி & திரு. ஜோசப்
- திருமதி & திரு. செங்குட்டுவன்
- திருமதி & திரு. செபாஸ்டின் ஜோசப்



உன் தோளினின்று அவன் சுமையும்; உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்: ஏசா. 10:27

# அக்டோபர் 2013 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 06-10-2013 | **சகோ. அற்புதராஜ்** | Rev. **பென்கர் ஸ்டீபன்** |
| 13-10-2013 | **சகோ. விசு** | Rev. **பென்கர் ஸ்டீபன்** |
| 20-10-2013 | **சகோ. ஸ்டாலின்** | Rev. **பென்கர் ஸ்டீபன்** |
| 27-10-2013 | **சகோ. ஜெயசேகர்** | **சகோ. கிறிஸ்டோபர்** |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 04-10-2013 | **சகோ. ஸ்டாலின்** | |
| 11-10-2013 | **சகோ. ஜசக்துரை** | **சகோ. ரவிச்சந்திரன்** |
| 18-10-2013 | **உபவாச திருவிருந்து** / Rev. **பென்கர் ஸ்டீபன்** | |
| 25-10-2013 | **குடும்ப ஆராதனை** | |

சங்கிலி தொடர் ஜெபம்: 03-10-2013 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 10-10-2013 இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
**செய்தி** :- Rev. **பென்கர் ஸ்டீபன் (தமிழ் நாடு)**

One day Retreat: 15-10-2013 காலை 9.30 மணி முதல் மாலை 3.30 வரை
இடம்: St. Paul's Church - Ahmadi, **செய்தி** :- Rev. **பென்கர் ஸ்டீபன்**

வாலிபர் கூடுகை: *25.10.2013*, சகோ. சதீஸ்குமார் இல்லம், ஃபாஹாகீல்

பெண்கள் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்

கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்: -ஏசா. 11:3

# வேத புழு

ஸ்பர்ஜன் என்னும் புகழ் பெற்ற பிரசங்கியார் ஒருமுறை கிறிஸ்தவ வீடு ஒன்றிக்கு சென்றிருந்தார். குடும்பத்தினரோடு பல விஷயங்களை பேசிவிட்டு, தன் பையில் வேதாகமம் இருந்தும் அந்த வீட்டிலிருந்து வேதாகமத்தை கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார். அவர்களோ வேதத்தை படிக்கும் பழக்கமே இல்லாத கிறிஸ்தவர்கள். குடும்ப ஜெபமும் இல்லாத கிறிஸ்தவர்கள். ஆகவே சுமார் 20 நிமிடம் கழித்து ஒரு மூலையிலிருந்து வேதத்தை தேடி எடுத்து, தூசி தட்டி பிரசங்கியார் கையில் கொடுத்து, பாருங்கள்! வேலைக்காரன் எங்கேயோ போட்டிருக்கிறான் என்று வேலைக்காரன் மேல் குற்றம் சாட்டினார்கள். ஸ்பர்ஜன் அந்த வேத புத்தகத்தை வாங்கிய பொழுது, அதில் நாலைந்து துவாரங்கள் இருப்பதை கவனித்தார். அநேக ஆண்டுகளாக அவ்வேதத்தை உபயோகிக்காததால் பூச்சிகள் துளைத்துள்ளன என்று அறிந்து கொண்டார்.

இறுதியில் அவர் ஜெபிக்கும் போது, ஆண்டவரே! வேதத்தை முதல் அட்டையிலிருந்து கடைசி அட்டை வரை துளைத்துக் கொண்டு போகவல்ல ஒரு பூச்சியாக, புழுவாக என்னை மாற்றும், எங்களை மாற்றும் என ஜெபித்தார். அக்குடும்பத்தார் தங்கள் தவறை உணர்ந்தனர். கிறிஸ்தவர்களாகிய நம்மில் அநேகர் வேதத்தை ஆராதனைக்கு மட்டுமே எடுத்துச் செல்கிறோம். ஒரு சிலர் சங்கீதத்தையும் நீதிமொழிகளையும் மாத்திரமே வாசிக்கிறோம். **"என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன்: அவைகளை அந்நிய காரிமாகவே எண்ணினார்கள்"** (ஓசி. 8:12) என்று தேவன் நம்மைக் குறித்து சொல்லாதபடி, வேதத்தை தினமும் வாசித்து அப்பியாசிக்கப் பழக வேண்டும். தேவன் நமக்கென்று எழுதிக் கொடுத்துள்ள மகத்துவமான காரியங்களை நாம் வாசித்து அவற்றை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அவற்றை யாருக்கோ தேவன் எழுதியிருக்கிறார் என்று அந்நிய காரியமாக எண்ணக் கூடாது.

நாம் முழு வேதத்தையும் வாசித்து தியானிப்போமானால் இடறலற்ற சமாதானமான ஒரு வாழ்வை வாழ முடியும். காரணம் கிறிஸ்தவ வட்டாரத்தில் அநேக துர்உபதேசங்களும், வேதத்தில் சொல்லப்பட்டிராத பல புதிய முறைகளும் எங்கும் பரவி படர்ந்து வருகின்றன. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும் விதமாக அவைகள் எங்கும் வலுவாய் தொனிக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட நாட்களிலே நாம் முழு வேதத்தையும் தியானித்து பெரோயா பட்டணத்தாரை போல காரியங்கள் அப்படி இருக்கிறதா! என வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து நற்குணசாலிகளாக நாம் மாறவேண்டியது மிகவும் அவசியம்.

பிரியமானவர்களே! ஒவ்வொரு நாளும் வேதம் நமக்கு ஆத்மீக ஆகாரமாக மாறுமென்றால், உலகிலுள்ள அனைத்து சோதனைகளிலும் நாம் ஜெயமெடுக்க முடியும். உலகமோ, மாமிசமோ, பிசாசோ எனக்கு எதிராய் நிற்பவன் யார்? என நாம் தைரியமாய் சொல்ல முடியும். எப்படிப்பட்ட பிரச்சனைகளோ, வேதனைகளோ, தோல்விகளோ, துன்பங்களோ எது வந்தாலும் வேதம் நமக்கு வழிகாட்டியாக மாறும். ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசித்து வேத புத்தகத்தின் புழுவாக மாறி நம்மை அர்ப்பணிப்போம். வேதத்தின் இரகசியங்களை தேவன் நமக்கு கற்றுத் தருவார். **"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை"** (சங். 119:165). ஆகவே இடறலில்லா வாழ்க்கைக்கும், சமாதானமான வாழ்விற்கும் வேதம் இன்றியமையாததுமாயிருக்கிறது. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
Sis. **ஹேனா எசேக்கியேல்**

நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்: கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்: அவரே எனக்கு இரட்சிப்புமானவர். -ஏசா. 12:2




## தடுமாற்றம்

எந்நாளும் விழ மாட்டேன் என பகன்றவரெல்லாம்
என்னமாய் தடுமாறி உருக்குலைந்து மறைந்தே போனார்
எந்நாளும் வழுவாமல் வாழ்வில் நிலைத்திருக்க முடியாது
மண்ணான சீரத்தில் நாமிருக்கும் நாட்கள் வரை.

மாம்சத்தில் பின்மாற்றம் அடையாமல் நிலைத்திருக்க
மரசிலுவை மரணம் ஏற்ற இயேசுவிடம் வழியுண்டு
மன்னித்து ஏற்கும் அன்பரை என்றும் தியானித்து
மறை சொல்லும் சத்தியத்தில் நாளும் நிலைத்திரு.

காலமெல்லாம் நிலைத்திருக்க தம் பெலன் போதாது
கர்த்தரின் கிருபையின்றி நாம் பிழைக்கவே முடியாது
காணாமல் சென்று மனந்திருந்தி வந்த கெட்ட குமாரனை
கிருபையுடன் ஏற்றுக் கொண்ட தகப்பன் நமக்குண்டு

தவறி விழுந்த இடத்திலேயே நொந்து கிடக்காதே
தூசியை உதறிவிட்டு திரும்பவும் எழுந்திரு
தூரத்தில் தெரியும் நம்பிக்கை வெளிச்சம் நோக்கி
துரிதமாய் தொடர்ந்திடு உன் வாழ்க்கை பயணத்தை

நம் பெலவீனம் யாவும் அறிந்த தகப்பன் இயேசுவிடம்
நம் ஏக்கங்கள் யாவும் எடுத்துரைப்போம்
நமக்கிருக்கும் கொஞ்ச பெலனைக் கொண்டு
நம்புவதற்கரிய பெரிய காரியங்களை செய்ய வைப்பார்

– ஸ்டாலின்



## பல்வலி

குவைத் பாட்டி

**துளசி இலை 2, கொஞ்சம் உப்பு மற்றும் மிளகுத்தூள் ஆகியவற்றை வலி இருக்கும் இடத்தில் வைத்து அழுத்தி வர பல் வலி குறையும்.**

– **அஹமதி தமிழ் திருச்சபை**

## சபையின் 2013-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# “பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது”

ரோமர். **6:14**

# வாள் (வசனம்) வீச்சு

## தீவிர ஜெபம்

மரணஅலைகள் என்னைச் சூழ்ந்துகொண்டு, துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது. பாதாளக் கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது: மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று (2சாமு. 22:5-7).

உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார் (சங். 22:24).

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு: நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் (சங். 50:15).

ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்: அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்: தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார் (சங். 62:8).

அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி, அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபையின்படி மனஸ்தாபப்பட்டு, (சங். 106:44,45).

என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளைவிட்டு வழிதப்பவிடாதேயும் (சங். 119:10).

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்: அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் (ஏசா. 55:6).

உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை: தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து, எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர்(ஏசா. 64:7).

உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள் (எரே. 29:13).

எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு: ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு: எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு (புல. 2:19).

நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம். நாம் நம்முடைய கைகளோடுங்கூட நம்முடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக்கடவோம் (புல. 3:40-41).

நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவே. 2:12).

இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார் (மத். 17:21).

**- அஹமதி தமிழ் திருச்சபை**

கர்த்தர் சீயோனை அஸ்திபாரப்படுத்தினார்: அவருடைய ஜனத்தில் சிறுமையானவர்கள் அதிலே திடன்கொண்டு தங்குவார்கள் என்பதே. -ஏசா. 14:32

# உதிர்ந்த முத்துக்கள்

இந்த சிறியரில் (வறியவர், ஏழைகள், கைவிடப்பட்டோர், அனாதைகள்) ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள். **–இயேசு கிறிஸ்து**

பரனை நேசி: உன்னைப் போல பிறனை நேசி. **–இயேசு கிறிஸ்து**

உனக்கு உலகத்தில் ஒரே ஒரு வேலை உண்டு. அது ஆத்தும ஆதாயம்.

**–John Wesley (Evang)**


இழக்கக் கூடாத ஒன்றிக்காக (நித்திய ஜீவன்) வைத்திருக்க முடியாத ஒன்றினை (ஜீவனை) இழப்பவன் மூடனல்ல. **–ஜிம் எலியட்**





## செப்டம்பர் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. சுபா ஸ்டீபன்
Sis. ஐரின் நிஷா கிரன்குமார்
Sis. செலின் டேவிட்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. ஹெப்சி சாம்
Sis. ஐரின் சிங்
Sis. ஜெபா
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. அனிதா தாஸ்
Bro. ஆல்பிரட்
Bro. பக்தராஜ்
Bro. அருள்மணி
Bro. கனிஷ் ஜோஸ்வா
Sis. கீதா ஜெயகுமார்
Sis. விக்டோரியா ராஜன்
Sis. மரியா குளோரி தாஸ்
Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. ஜீனா சதீஸ்குமார்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. பிரியா பிரேம்குமார்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. லைசா பொன்னையன்
Bro. தர்மர்
Bro. ராமலிங்க இம்மானுவேல்
Bro. லாசர்
Bro. ஆசீர்வாதம்




## நன்மை பயக்கும்

நீ நேசிக்காமல் கொடுக்கலாம். ஆனால் நேசித்தால் கொடுக்காமல் இருக்க முடியாது. கலப்பையில் கைவைத்து பின்னிட்டு பார்ப்பவன் பரலோக ராஜ்யத்திற்கு உகந்தவன் அல்ல. பிறருக்காக வாழ ஆசைப் படுபவன் முதலாவது பிறருக்காக ஜெபிக்க ஆரம்பிப்பான். நம்மைக் குறித்து நாம் கவலைப் படுவதைவிட நம்மைக் குறித்து கர்த்தர் அதிக கவலைப்படுகிறார்.

தன்னை நேசிப்பவன் – நாத்திகன்
பிறரை நேசிப்பவன் – சாதாரண மனிதன்
பகைவரையும், துரோகிகளையும் மன்னித்து நேசிப்பவன் – இயேசுவின் பிள்ளை

**–ஆல்பர்ட்**

இன்றைய தகவல்

## கடன் பெறாத நாடு

உலகில் எந்த ஒரு நாட்டிடமும் கடன் பெறாத நாடு ஒன்று உண்டா என்பதில் அனைவருக்கும் சந்தேகம் வருவது உண்மை. ஆனால் எந்த ஒரு நாட்டிடமும் கடன் பெறாத நாடு ஒன்று உண்டு. அது தான் லிபியா. 1951 –ல் உலகின் மிக ஏழை நாடாக இருந்தது லிபியா. நேட்டோ படைகளின் தாக்குதலுக்கு முன்பு வரை மிகவும் வசதியான சூழலில் வாழும் மக்களைக் கொண்ட ஒரே ஆப்பிரிக்க நாடு லிபியா. லிபியாவில் வீடு ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமை யாக கருதப்பட்டது. மின்சாரம் அனைத்து மக்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. மருத்துவமும் கல்வியும் இலவசமாக வழங்கப்பட்டது. மக்கள் தாங்கள் விரும்பும் கல்வியோ மருத்துவமோ லிபியாவில் கிடைக்காத பட்சத்தில் வெளிநாடு சென்று பெறுவதற்கு அரசே பொருளுதவி செய்தது. வங்கிகளில் கடன் கோருபவர்களுக்கு வட்டியில்லா கடன்களாக மட்டுமே கொடுக்கப்பட்டது. விவசாயம் செய்ய விரும்புபவர்களுக்கு இலவசமாக நிலமும் எல்லா உதவிகளும் இலவசமாக அரசே செய்தது. இப்படி உல கில் எவருக்கும் கடன்படாத நாடு லிபியாவாக திகழ்கிறது. (உபா. 28:12 இந்த நாட்டிற்கு பொருந்துமா!).

**– அஹமதி தமிழ் திருச்சபை**

## ஞாபகத்திற்கு

நமது சபையின் ஜெப ஊழியப் பொறுப்பாளர் சகோ. ஜாண் பீற்றர் நிரந்தரமாக இந்திய தேசம் சென்றதால் ஜெப தேவைகளுக்கு சகோ. எபிநேசரை (66857827) அணுகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

| | |
|---|---|
| Geona Shamy | Sharon |
| Sharon Keerthana | Lydia |
| Jainy | Jessly |
| Joseph Prince | Solomon |

அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரையே நோக்கிக்கொண்டிருக்கும். –ஏசா. 17:8



## செப்டம்பர் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. | ரூத்தை பார்த்து போவாஸ் | ரூத். 2:12 |
| 2. | நூதன தேவர்களைத் தெரிந்துகொண்டபோது | நியாயா. 5:8 |
| 3. | தேபேசு பட்டணம் | நியாயா. 9:50 |
| 4. | சேப்பாத்தில் குடியிருக்கிற கானானியரை முறியஅடித்து அந்த பட்டணத்திற்கு ஒர்மா என்று பேரிட்டார்கள் | நியாயா. 1:17 |
| 5. | கிதியோன் | நியாயா. 8:17 |
| 6. | போவாஸ் | நியாயா. 4:11 |
| 7. | நூனின் குமாரனாகிய யோசுவா | நியாயா. 2:8 |
| 8. | பிரத்தோனியனான இல்லேலின் குமாரனாகிய அப்தோன் | நியாயா. 12:15 |
| 9. | யெகோவா ஷாலோம் | நியாயா. 6:24 |
| 10. | சிம்சோன் | நியாயா. 15:8 |
| 11. | கிதியோனின் மூத்தகுமாரனாகிய யெத்தேர் | நியாயா. 8:20 |
| 12. | ரூபனின் | நியாயா. 5:15 |
| 13. | லாயீஸ் ஊர் | நியாயா. 18:27,28. |
| 14. | அபிமெலேக்கை, சீகேமிலிருக்கிற சகல பெரியமனுஷரும், மில்லோவின் குடும்பத்தாரனைவரும். | நியாயா. 9:6 |
| 15. | சிம்சோன் | நியாயா. 13:25 |

**பேரிக்காய்**

## பழம் சாப்பிடுங்க

பேரிக்காயில் வைட்டமின்கள் மற்றும் நாற்சத்து அதிகம் உள்ளது. இது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்பாடுடன் வைத்துக் கொள்ள உதவும்.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் - போன்: 99460225

# ஒருமனம் தரும் நறுமணம்

"இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" (சங். 133:1). "ஒற்றுமை" என்பது "யூனிபார்ம்" (சீருடை) போடுவது அல்ல. தேவனுக்கு தேவை Unity; Uniformity அல்ல. தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு வெவ்வேறான தாலந்துகளை கொடுத்திருக்கிறார். அவரவருக்குரிய தாலந்துகளை தேவனுடைய மகிமைக்கென்று பயன்படுத்தும் போது உண்டாவதுதான் ஒற்றுமை. தன் சுய மகிமைக்கென்று பயன்படுத்தினால் வருவது சபையிலே பிரிவினைகள், வீணான குழப்பங்கள். திருச்சபை குடும்பத்தில் நாம் ஒருமித்து வாசம் பண்ணுவது தேவனுக்கு பிரியம். அதுவே நன்மையும் இன்பமுமானது.

**1. அது நல்ல தைலத்திற்கு ஒப்பாயிருக்கிறது:–** நல்ல தைலம் (precious Oil) சந்தோஷத்தைக் குறிக்கிறது (சங். 104:15). ஆறுதலைக் குறிக்கிறது (ஏசா. 1:6). ஆரோனின் மார்பில் 12 கோத்திரங்களைக் குறிக்கிறது. தலையில் ஊற்றப்படும் தைலம் 12 கற்களையும் நனைத்து இறங்குகிறது. விசுவாசிகள் ஒருமித்து வாழும் போது சபைக்கு தலையாகிய பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்து மூலமாய் சபையின் சரீரம் எனப்படும் விசுவாசிகள் அனைவருக்கும் ஆசீர்வாதம் ஊற்றப்படுகிறது. அது நமக்கு சந்தோஷத்தையும் ஆறுதலையும் தருகிறது.

**2. அது இறங்கும் பனிக்கு ஒப்பாயிருக்கிறது:–** எர்மோன் எருசலேமுக்கு வடக்கேயும், சீயோன் தெற்கேயும் இருக்கிறது. ஆனாலும் தேவனுடைய வல்லமையான கிரியை எர்மோன் மேல் இறங்கும் பனியை வேகமாய் வீசும் காற்றினால் சீயோனுக்கு கொண்டு செல்கிறது. திருச்சபை என்ற குடும்பத்தில் இரு துருவங்களாக பிரிந்து இருக்கும் மனிதர்கள் உண்டு. தேவனுடைய வல்லமைக்கு, அன்புக்கு தங்கள் வாழ்வில் இடம் கொடுக்கும் போது அது அவர்களை இணைத்துவிடும். இதுவே நன்மையும் இன்பமுமானது.

எர்மோன் உயரமாயும் (9000 அடி), சீயோன் தாழ்வானதாக (2450 அடி) காணப்பட்டாலும் ஆண்டவர் தரும் ஆசீர்வாதம் எல்லாருக்கும் உண்டு என்பதற்கு அடையாளமாக எர்மோன் மேல் இறங்கும் பனி சீயோனையும் நிரப்புகிறது. சபையிலே உயர்வு தாழ்வு கிடையாது. படிப்போ, பட்டமோ, பணமோ, சாதியோ பிரிவினையை உண்டாக்க முடியாது. பனிபோல் தேவன் ஒவ்வொருவரையும் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்க விரும்புகிறார். ஏற்றத் தாழ்வுகளை மறந்து ஒருங்கிணைந்து செயல்படுவோம். கர்த்தர் தாமே என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுவாராக: ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கிறிஸ்டோபர்**

## சிரி.... சிந்தி

**வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம்தான். கடமையை செய்தால் வெற்றி. கடமைக்கு செய்தால் தோல்வி.**

**– அஹமதி தமிழ் திருச்சபை**

அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவேன்: அவன் தன் தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாக இருப்பான். -ஏசா. 22:23



ஒரு ஊரில்

## அழகே மௌனமா!

ஒரு மாதுளைச் செடி என்னைப் பார்: என் அழகைப் பார் என்றது. உடனே அருகிலிருந்த ஆப்பிள் பழம் உன்னைவிட நான் தான் அழகு என்றது. இல்லை இல்லை, உன் அழகு என் அழகிற்கு ஈடாகாது என்று மறுபடியும் வலியுறுத்தியது மாதுளை. சீச்சீ நீயும் ஓர் அழகியா! நீதான் உன் அழகை மெச்சிக்க வேண்டும் என்று எதிர்த்து வாதாடியது: கூச்சலிட்டது ஆப்பிள்.

இவ்வாறு மாதுளையும் ஆப்பிளும் வக்கீல்களாய் மாறிட, வாக்குவாதம் வரம்பு மீறிச் சென்றது: வாக்குவாதம் உச்சநிலையையும் அடைந்தது. இவர்களின் சப்தம் சற்று தூரத்திலிருந்த முட்செடியின் காதில் விழுந்தது. முட்செடியும் தன்னை சற்று சுதாரித்துக் கொண்டு அந்த வாக்குவாதத்தின், அழகிப் போட்டியில் தன்னையும் இணைத்துக் கொண்டு, தனது வாதத்தை முன் வைத்து வாதாடத் தொடங்கியது.

முட்செடி மாதுளையையும் ஆப்பிளையும் பார்த்து சொன்னது, என் மதிப்பிற்குரிய தோழியர்களே! பொருளற்ற உங்கள் பூசல்களும் அதனால் உண்டான வாதங்களும் சற்று அதிகப் பிரசங்கித்தனமாகவே உள்ளது. அதுவும் என்னைப் போன்ற அழகுள்ளோர் அருகில் இருக்கும் பொழுது இதுபோன்ற போட்டியும் வாதமும் பொருளற்றது. ஆகவே உங்களது வாதத்தை இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்: எனக்கு அழகு மகுடத்தைச் சூட்டிவிட்டு வாயை பொத்திகிட்டு அடங்கி இருங்கள் என்று உரத்த குரலில் தற்பெருமையுடன் கூறியது முட்செடி.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பார்கள். அறிவு உடையோர் இதை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். மாதுளையும் ஆப்பிளும் விட்டுக் கொடுக்காததால் முட்செடி மகுடம் சூட முந்திக் கொள்ளுகிறது. (நல்லவர்கள் சண்டையிட்டால் பொல்லாதோர் நல்லவராகி நியாயம் சொல்ல வந்துவிடுவார்கள்). **"ஆபிரகாம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்: நாம் சகோதரர்கள்"** (ஆதி. 13:8) என்று விட்டுக் கொடுத்து சாத்தானின் துர்ச்செயலுக்கு இடம் கொடாமல், சமாதான உடன்படிக்கை செய்து சந்தோஷமாய் வாழ வழிகளை தெரிந்து கொண்டார்கள். ஆபிரகாமும் விட்டுக் கொடுத்து மேன்மையடைந்தான். நாமும் விட்டுக் கொடுத்து மேன்மையான வாழ்வை சுதந்தரித்துக் கொள்ளலாமே!.

**கர்த்தரின் கிருபையில்**
**அ.ஃபியா ஆ. தாஸ்**

---

## போ அல்லது அனுப்பு

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**

சகோ. சிவகுமார் _ போன்: 94494541

# ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அந்புதராஜ்
60692485



சகோ. ஜாண் பீற்றர்
(ஜெப ஊழியப் பொறுப்பாளர்)
நிரந்தரமாக இந்தியா
செல்வதால் சபையின் நினைவு
பரிசு வழங்கப்படுகிறது

## சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்

**---------(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait**

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com**

**சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048**

**Private Circulation only**